அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 14/94

எனது இல.1-543 ஈ/807 டீ/3/94
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
1994.03.30

எல்லாச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

உள்ளூராட்சி நிருவாக சேவையை (உ.நி.சே)
இலங்கை நிருவாக சேவைக்கு (இ.நி.சே.)
உட்சேர்த்தல்-சேவை முதுமுறையை முன் நிலைப்படுத்தல்
1ஆம் வகுப்பிற்கு நியமித்தல்-நியமனங்களை முற்றேதியிடல்.

20/92 இலக்க 1992.05.05ஆந் தேதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மீது கவனம் கோரப்படுகின்றது.

02. பின்வருமாறு நடவடிக்கை மேற்கொள்ளுவதற்குத் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

(அ) இ.நி.சே. பிரமாணக் குறிப்பின்படி மற்றொருவிதத்தில் தகுதியற்று இல்லாதிருக்குமிடத்து 1979.01.01திகதி அல்லது அதற்கு முன்னதாக இ.நி.சே.வகுப்பு 11 தரம் 11 இல் நியமிக்கப்பட்டும் 1992.03.04 திகதியில் இ.நி.சே. வகுப்பு 11 தரம் 1இல் இருந்தவர்களுமான உத்தியோகத்தர்கள் அவர்களுக்கென தனிப்பட்ட முறையில் மிகையுழியர் பதவியணியின் அடிப்படையில் 1992.03.04 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் இ.நி.சே.வகுப்பு 1இல் பதவி உயர்த்தப்படுவதற்கும்.

(ஆ) அவ்வாறு பதவி உயர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களை 1992.03.04 திகதியில் இ.நி.சே.வகுப்பு 1இல் உட்சேர்க்கப்பட்ட உள்ளூராட்சி நிருவாக சேவையின் உத்தியோகத்தர்களை விட உயர்ந்த சேவை முதுமுறையுடையவர்களாக அமர்த்துவதற்கும்,

(இ) மேல் (அ) பந்தியில் குறிப்பிட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு 1992.03.04ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் நிலுவை சம்பளங்களை வழங்குவதற்கும்.

(ஈ) இ.நி.சே.வகுப்பு 1இல் மேலும் செய்யப்படும் அனைத்து பதவி உயர்வுகளின் போது இ.நி.சே. பிரமாணக் குறிப்பில் வரும் விதிகளின்படி கண்டிப்பாக நடந்து கொள்ளவும்.

03. மேல்வரும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்காக இத்துடன் இருக்கின்ற படிவத்தின்படி தகுந்த முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களூடாக என்னிடம் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட இ.நி.சே.உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கவும்.

04. இச் சுற்றறிக்கை திறைசேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: வை.பீ.புஸ்ஸெதெனிய.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

படிவம்

உள்ளூராட்சி நிருவாக சேவையை (உ.நி.சே)இலங்கை நிருவாக சேவைக்கு (இ.நி.சே)உட்சேர்த்தல் - சேவை முதுமுறையை முன்நிலைப்படுத்தல் - 1ஆம் வகுப்புக்கு நியமித்தல் - நியமனங்களை முற்றேதியிடல்.

---

## பகுதி_1

01. (அ) உத்தியோகத்தரின் பெயர்:-
    (ஆ) இ.நி.சே. நியமிக்கப்பட்ட திகதி:-
    (இ) இ.நி.சே. வகுப்பு 11 தரம் 1இற் நியமிக்கப்பட்ட திகதி:-

02. (அ) தற்போதைய பதவியும் திணைக்களமும்:-
    (ஆ) உத்தியோகபூர்வ முகவரி:-

03. இலங்கை நிருவாக சேவைக்கு சேர்க்கப்பட்ட முறை:- திறந்தபோட்டி பரீட்சை மூலம்/மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சை மூலம்/திறமையடிப்படையில் பதவி உயர்வு செய்வதன் மூலம்:-

04. தற்போதைய ஆண்டு வேதனம்:-

05. நான்............இலக்க........தேதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின்படி இ.நி.சே. வகுப்பு 1இல் பதவி நியமனம் செய்யப் படுவதற்கு தகுதியானவரென்பதை வெளிப்படுத்துகிறேன். நான் இ.நி.சே. பிரமாணக் குறிப்பின் படி பதவி உயர்வு கிடைக்கப் பெறுவதற்குத் தகுதி யற்றவராக இருக்கவில்லை. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங் -கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் சரி யானவையாகும்.

திகதி:-

----------------

விண்ணப்பதாரியின் கையொப்பம்

## பகுதி 11

திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

இப்படிவத்தில் திரு/திருமதி/செல்வி...................அவர்களால் தரப்பட்டுள்ள விபரங்கள் அவரின் தனியார் கோவையிலுள்ள விபரங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டதென்றும், அதன்படி அவை சரியானவையென்றும் சிபாரிசு செய்கிறேன். அவர்...............இலக்க.........தேசிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின்படி இ.நி.சே.வகுப்பு 1க்கு பதவி உயர்வு செய்யப்படுவதற்கு தகுதியுடையவராவார்.

இணைக்கப்பட்டுள்ள கடிதத்தில் என்னால் காட்டப்பட்ட காரணங்களின்படி சிபாரிசு செய்ய முடியாது.

(தேவையற்ற சொற்களை கீறிவிடவும்)

கையொப்பம்

பெயரும்/பதவியும்

---

## பகுதி 111

...............இலக்க ............தேசிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு திரு/திருமதி/செல்வி............ இ.நி.சே.வகுப்பு 1க்கு பதவி நியமனம் செய்வதற்கு தகுதியுடையவராவார்/ தகுதியற்றவராவார்.

விண்ணப்பத்தை சிபாரிசு செய்கிறேன்/சிபாரிசு செய்யவில்லை

கையொப்பம்
பெயர்
செயலாளர்
..............அமைச்சு

திகதி: